# கோவிட் தொற்று இரண்டாவது அலை குறித்து

**மக்கள் நலவாழ்வு இயக்கத்தின் அறிக்கை - மே 2021**

- ✓ **மக்களின் உடல் நலனையும் உயிர்களையும் காப்பாற்றும் முழு பொறுப்பினை அரசுகள் ஏற்கவேண்டும் - இப்போதே!**

- ✓ **அனைவருக்கும் சுகாதார உரிமை கிடைப்பதையும், நோயைக் கட்டுப்படுத்துவதையும் அனைவருக்கும் தடுப்பூசி போடப்படுவதையும் உறுதிசெய்ய உடனடியாக நடவடிக்கை எடு!**

மே 1, 2021 அன்று அரசின் அறிக்கையின் படியே கோவிட்19 தொற்றினால் புதியதாக பாதிக்கப்பட்டவர்கள் 4 லட்சத்தினை தாண்டியும் அந்த தொற்றினால் இறந்தவர்கள் 3,500 என்றும் தெரிவிக்கிறது. நாடு ஒரு மோசமான சூழலை கடந்து கொண்டிருக்கின்றது. பல நகரங்களில் நோயாளிகள் மருத்துவ மனைகளில் படுக்கை வசதியும், ஆக்சிஜனும் இதர மருத்துவ வசதிகள் கிடைக்காமல் அவதியுறும் நிலை எழுந்துள்ளது. பரிசோதனை அறிக்கை கிடைப்பது தாமதமாகிக் கொண்டிருக்கின்றது அதே நேரம் மயானங்களில் பிணங்களை எரிக்க நெடுநேரம் வரிசையில் நிற்கும் நிலையும் இருக்கின்றது.

இதற்கு முன்பு பல நாடுகளின் அனுபவங்களை தெரிந்தும் மத்திய அரசானது இந்த இரண்டாவது அலையினை கவனியாது அதற்கான முன் எச்சரிக்கையாக எந்த நடவடிக்கையினையும் எடுக்கவில்லை. மத்திய சுகாதாரத்துறையின் கீழ் 123வது நிலைஆணைக்குழு கூடி ”கோவிட்19 தொற்றும் அதனை எதிர்கொள்ளும் செயலும்” என்று ஒரு அறிக்கையினை சென்ற வருடம் நவம்பர் மாதத்திலேயே இரண்டாவது அலையினை பற்றி மத்திய அரசுக்கு எச்சரித்துள்ளது.

எந்தவித சமூக இடைவெளிகளைப்பற்றி காலைப்படாமல் மகா கும்பமேளா மற்றும் தேர்தல் ஊர்வலங்களை அனுமதித்ததால் பேரிடர் வளையம் மிக வேகமாக பெரிதாக்கியுள்ளது. . ஆனால் இந்த கொடிய நோய் தொற்றினால் ஏற்பட்டுள்ள சுகாதார மற்றும் மக்களின் சிகிட்சை வசதிகளை அரசு . மேம்படுத்தாமல், மக்கள் இந்த தொற்று பரவுவதை தடுக்க கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றாமல் இருப்பதும், அரசு இந்த பரவலை

எதிர்பார்க்கவில்லை என்றும் அதனால் இந்த தொற்றினை தடுக்கவாய்ப்பில்லை என்றும் பொறுப்பற்ற முறையில் அரசு கூறியுள்ளது.

இந்த கொடிய புதியரக தொற்றால் மக்கள் அவதியுற்றுக் கொண்டிருக்கும் போதும் மத்திய அரசும் பல மாநில அரசுகளும் எந்தவொரு அக்கறையுமின்றி மீடியாவில் வெளிவரும் செய்திகளைப்பற்றி குறை சொல்லிக்கொண்டும் அரசின் குறைகளை சொல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் போக்கினை கையாண்டு கொண்டிருக்கின்றன, இப்போக்கு ஜனநாயக மரபுகளை பலவீனப் படுதுவதாகும், மேலும் பேச்சு மற்றும் எழுத்து சுதந்திரத்தினை மறுப்பதாகும், அதே நேரத்தில் தனியார் மயத்திற்கும், கொள்ளை லாபத்திற்கும் அரசு துணை போவதாகும்.

இந்த சூழலில் மக்கள் உடல் நலத்திற்காகவும் அதனை அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்பதற்காகவும் இயங்கும் அகில இந்திய அளவிலான மக்கள் நல்வாழ்வு இயக்கங்கமும், இதர சமூகநல இயக்கங்களும் மத்திய அரசையும் மற்ற மாநில அரசுகளையும் தங்களின் கடமைகளிலிருந்து பிறழாமல் அவற்றினை மக்களுக்குக்கு அளிக்க கீழ்கண்டவாறு வலியுறுத்துகின்றன.

1. **அனைத்து நோயாளிகளுக்கும் இலவச மருத்துவ வசதியினைத் தருவதும் போக்குவரத்தினை உறுதி செய்வதும் மருத்துவ வசதிகள் மறுக்கப்படுவதைத் தடுப்பதுமான கடமைகள்**:

   அரசானது கோவிட் தொற்றினால் மிதமாகவோ அல்லது தீவிரமாகவோ பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனிகளிலும் இதர கோவிட் மருத்துவ உதவி மையங்ககளிலும் மருத்துவம் உத்திரவாதப்படுத்த வேண்டும். எங்கு அரசு மருத்துவ சேவை இல்லையோ தனியார் மருத்துவமனைகளில் அவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி தரப்பட வேண்டும். இதற்கான தனியார் மருத்துவ மனைகளை தேர்ந்தெடுத்து நோயாளிகளுக்கு இலவச மருத்துவத்தினை அளித்து அந்த தனியார் மருத்துவ மனைகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினை அரசு அளித்திட வேண்டும். ஆம்புலன்ஸ்சுகள் தேவையான அளவு விரிவாக்கப்பட்டு அவைகள் இலவசமாகவோ அல்லது குறைந்த செலவிலோ நோயாளிகளின் போக்குவரத்திற்கு அளித்திட வேண்டும். கோவிட் தொற்று அறிகுறிகள் தீவிரமாக காணப்படும் நோயாளிகளுக்கு ஆர்டிபிசிஆர் பரிசோதனை இல்லாமல் எக்ஸ்ரே, சி.டி. ஸ்கான் பரிசோதனை கொண்டு அவர்களுக்கு மருத்துவ வசதிகளை அரசு கொடுக்க வேண்டும்.

2. **தீவிர கோவிட் மருத்துவத்திற்கு ஆக்ஸிஜன் மற்றும் இதர வசதிகள் உள்ளடக்கிய படுக்கை வசதிகளை விரிவாக்கி கிடைப்பதை உறுதி செய்யும் கடமை:**

அரசு மருத்துவமனைகளில் இந்த தீவிர தொற்று நோயாளிகளுக்கான ஆக்ஸிஜன் வசதிகளையும் இதர வருதுகள் வசதிகளை விரிவாக்கம் செய்திட வேண்டும் தேவையான அளவு வசதிகளை கார்ப்பரேட் மருத்துவமனிகளிலிருந்து பேரிடர் மேலான்மை கால சட்டத்தின் அடிப்படையில் மாநில அரசுகள் கையகப்படுத்தி தீவிர சிகிச்சை பிரிவு முதற்கொண்டு அளித்திட வேண்டும். இத்தகைய வசதிகளை மக்களுக்கு தெரிவிக்க அதற்கான தகவல் தரும் மையங்களை அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. **அனைவருக்குமான கூடுதலான தேவையான மருத்துவ ஆக்ஸிஜன் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்யும் கடமை:**

அனைத்து பொது மருத்துவ மனைகளிலுக்கும் தனியார் மருத்தமனைகளுக்கும் மருத்துவ ஆக்ஸிஜன் தொடர்ந்து கிடைக்க அரசு ஒருங்கிணைக்கும் பணியினைச் செய்ய வேண்டும். மருத்துவமனைகளை தவிர தனியாக தேவைப்படுகிறவர்களுக்கும் இந்த வசதியானது கிடைக்க உறுதி செய்ய வேண்டும். இதன் விலையினையும் அரசு ஒழுங்குபடுத்தி அரசு அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.. இந்த வசதிகள் பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு அவ்வப்போது தெரியப்படுத்த வேண்டும்.

4. **தரமான பரிசோதனை கிடைக்க தேவையான ஏற்படுகள் தொடர்பான அரசின் கடமை:**

தொற்று அறிகுறிகள் கொண்ட அனைவரும் அவர்களது வீடுகளிலோ அல்லது அவர்களின் வீடுகளுக்கு அருகாமையிலோ பரிசோதனை செய்யப்பட்டு 24 மணி நேரத்தில் அந்த அறிக்கையினை தொற்றாளர்களுக்கு அளித்திட வேண்டும். பொது சுகாதார அமைப்பின் மூலம் இந்த பரிசோதனை திட்டம் மேம்படுத்தப்பட்டும் விரிவாக்கம் செய்யப்பட்டும், அதனை மறு ஆய்வு செய்தும் அத்துனை பரிசோதனை மையங்களையும் அரசு கண்காணிக்க வேண்டும்.

5. **தொற்று பரவுவதை கண்டறிவதையும், தனிமைபடுத்துவதையும் , தடுப்பு முறையில் வைப்பதையும் உறுதி செய்ய வேண்டிய அரசின் கடமை:**

நோயானது பரவாமல் இருக்க அது பரவும் இடங்களை கண்டறிந்தும், தொடர்புகளை அறிந்தும், பரிசோதனை செய்யப்பட வேண்டும். இதற்கான தேர்ந்த ஊழியர்கள் சமூக சேவகர்கள் சமூக ஒத்துழைப்புடன் பொதுவான நோய் தொற்றினை பற்றிய அறிவியலை கொடுத்து விழிப்புணர்வு மக்கள் பெற்று, மருத்துவ மனிகளிலோ அல்லது வீடுகளிலோ தனிமை படுத்துவதும்

அல்லது தடுப்பு பாதுகாப்புடன் இருப்பதற்கான வழிவகையினை அரசு செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது. வீட்டில் தனிமையில் இருப்பவர்களுக்கு போதிய ஆலோசனைகள் கொடுப்பதும் இவை அனைத்தையும் அரசு கண்காணிக்க வேண்டும். தேவைபடின் மருத்துவ மனைகள் ஆக்சிஜன் வசதியுடன் ஏற்பாட்டில் இருக்க வேண்டும்.

6. **கோவிட்19 உரிய அணுகுமுறையினை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டிய கடமை: (முகக் கசம் அணிதல், சமூக இடைவெளி மற்றும் சுத்தமாக இருப்பது)**

பல்வேறு மக்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுவதை அரசு அங்கீகரித்து, அடக்குமுறையாலோ அல்லது பலவந்தத்தாலோ இதனை செய்ய முயற்சிப்பது மக்களிடம் அச்சத்தை உருவாக்கும் என்பதை அரசு உணர வேண்டும். அவமானப்படுத்துவதையோ கட்டாயப்படுத்துவதையோ பாதித்தவர்களையே குற்றவாளிகளாகுவதையோ கைவிட்டு மக்களிடம் தொடர்ப்பு படுத்தும் முறைகளை சீரமைக்க வேண்டும்..கோவிட்19 க்குரிய அணுகு முறையை முதலாவதாக அரசும் மக்கள் பிரதிநிதிகளும் பின்பற்றிக் காட்ட வேண்டும்.

7. **மிகவும் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு முன்னுரிமை தந்து அனைவருக்கும் தடுப்பூசி என்பதை உறுதிப்படுத்தும் கடமை:**

அரசு கொள்முதல் செய்யும் கோவிட் தடுப்பூசிகளுக்கு தேசிய அளவில் ஒரே சீரான விலை நிர்ணயிக்கும் கொள்கையினை மத்திய அரசு ஏற்க வேண்டும்.., இந்த தடுப்பூசிகள் தாராளமாக் கிடைக்க அதிரடியாக அரசு விரிவான கொள்முதலில் முதலீடு செய்ய வேண்டும்..

அனைவருக்கும் இலவச தடுப்பூசியை உறுதி செய்யும் வகையில் மாநிலங்களுக்கு தடுப்பூசியினை வாங்கி வினியோகிக்கும் அடிப்படைக்கடமையின் மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்..

தடுப்பூசிக்கான தயக்கங்களுக்கு எதிராக விழிப்புணர்வு செய்து கொண்டே மிகவும் தேவையானவர்களுக்கு கிடைத்திட மாநில அரசுகள் தடுப்பூசி மையங்களை அதிகப்படுத்தியும் பொதுசுகாதாரம் திட்டங்கள் உருவாக்கியும் மக்களைச் சென்றடையச் செய்ய வேண்டும். தடுப்பூசிகளை அளிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் இருப்பின் கண்காணிக்க ஏற்பாடுகள் அவசியம்.

8. **கோவிட்19 அல்லாத அவசியமான பிற ஆரோக்கிய சேவைகள் கொடுக்க வேண்டிய கடமைகள்:**

காச நோய், எச்.ஐ.வி, மனநலம் மற்றும் இதர தொற்றல்லாத நோய்களுக்கு தொடர்ந்து மருத்துவம் பெறுபவர்கள் போன்ற கோவிட் நோயல்லாதவர்களுக்கும் மகப்பேறு, மற்றும் குழந்தைகள் பராமரிப்பு ஆகியவற்றிக்கும் தொடர்ந்து மருத்துவ வசதியினை இலவசமாக அரசுகள் அளிக்க வேண்டும்

**9. தனியார் துறையால் நோயாளிகள் சுரண்டப்படுவதும் அறிவுக்கு பொருந்தாத மருத்துவத்திலிருந்து மக்களை காப்பதும் அரசின் கடமை:**

அரசானது தனியார் துறையில் பரிசோதனை, மருத்துவம் கொடுப்பதற்கு கட்டணம் நிர்ணயித்து கண்காணிக்க வேண்டும், மேலும் மருத்துவ வசதி அளிப்பதில் தரமான மாதிரி முறையினை அதற்கேற்ற சிறப்பு அந்தஸ்துள்ள அமைப்பால் வெளியிட வேண்டும். அதே நேரம் சில தனியார் மருத்துவ மனைகளை அரசின் பொது நிதியிலிருந்து சேவையினை வழங்க பட்டியலிடப்பட வேண்டும்.

அரசு உடனடியாக தலையிட்டு தனியாராக இருந்தாலும் அல்லது அரசு மருத்துவமனைகளாக இருந்தாலும் அவைகளில் மருந்துகள் தேவையில்லாமல், உதாரணமாக ஃபாவிபிராவிர், நோய் நீக்கி பிளாஸ்மா, ரெம்டெசிவிர், டாஸ்லிசுமாப் போன்றவைகளை பரிந்துரைப்பதை ஒழுங்குபடுத்த வேண்டும். இவைகளெல்லாம் எந்தவிதத்திலும் கோவிட் நோய்க்கானது இல்லை. இவைகள் பரிந்துரைக்கப்படுவதால் அனாவசியமான தேவை அதிகரித்து சந்தையில் தட்டுபாடு ஏற்பட்டு கள்ளச்சந்தையில் விற்க வழிவகுக்கிறது. எனவே இதனைப்பற்றிய பொது விழிப்புணர்வினை பொதுமக்களிடம். ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசிடம் உள்ளது.

**10. தனி மனித உரிமைகளையும் சிவில் உரிமையினையும் மக்கள் பெறுவதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும்:**

பேசுரிமையிலும் மறுப்பு தெரிவிப்பதிலும் சமீபகாலமாக தலையீடு என்பது இருப்பதால் கோவிட்19 தொற்று நோயினை காட்டி இவைகள் மறுக்கப்படக்கூடாது. இதனால் எளியவர்கள் பல துயரங்களுக்கு ஆளாகியுள்ளார்கள் இது வலியவர்களாலும் அதிகாரத்தில் உள்ளவர்களாலும் செய்யப்படுகிறது.

11. **சமூக அமைப்புகளுடனும் மக்களுடனும் இணைந்து அரசு செய்ய வேண்டியதின் அரசின் கடமை:**

வட்டார, தாலுகா, மாவட்ட அளவில் இந்த சமூக அமைப்புகளுடன் இணைந்தோ அல்லது ஏற்படுத்தியோ சமூக ஒன்றிணைப்பினை விரிவாக்கம் செய்ய வேண்டும். மேலும் மாநில அளவில் சுகாதார அலுவலர்கள், பணியாளர்கள், இந்த துறையிலுள்ள பிற அமைப்புகள் ஆகியவைகளின் ஒருங்கிணைப்பினை வளர்த்து சுகாதார கட்டமைப்பினை வளர்ப்பது அரசின் கடமையாகும்

12. **மருத்துவர், மருத்துவ பணியாளர்கள் தூய்மைபணியாளர்கள் ஆகியோரின் உரிமைகளை பாதுகாப்பது அரசின் கடமை:**
இத்துறைகளிலுள்ள அனைத்து பணியாளர்களின் பாதுகாப்பு, பணிப்பாதுகாப்பு, நியாயமான ஊதியம் ஆகியவை அளிக்கப்பட வேண்டும். இதற்கான பொது நிதி ஒதுக்கப்படுத்தினால் மட்டுமே இதனை அளித்திட முடியும் இதனை அரசு செய்திட வேண்டும்.

13. **இறந்தவர்கள் மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட வேண்டும் அதே போன்று மயான பணியாளர்கள் நிலை மேம்படுத்தப்பட வேண்டும்.**
ஏற்கனவே இறந்தவர்களால் அந்த குடும்பம் வருத்தத்தில் இருக்கும் போது அந்த உடலை அடக்கம் செய்ய முடியாமல் வரிசையில் காத்திருக்கும் மோசமான நிலையினை மாற்ற வேண்டும். அதே நேரம் இந்த மயானத்தில் பணிபுரிபவர்கள் பலருடன் கலப்பதால் அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு அணிகள் தரப்பட வேண்டும். அவர்கள் பெரும்பாலும் தலித்துக்களாகவும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருப்பதால் அவர்களின் நிலை உயர்ந்திட அரசு முனைந்திட வேண்டும்.

14. **இறக்கும் இயல்பு, இதர நோய் இயல்பின் தரவுகளை மக்கள் பெற அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும்**:
இது பொது மக்களுக்கு தேவையானது, இதனால் இந்த தொற்று நிலைமையினை சிறப்பாக கையாள முடியும், மேலும் ஆராய்ச்சிக்கும், பிரச்சனையினை சரியாக புரிந்துகொள்ளவும் உதவும்.. இதிலும் தற்போது அபாயகரமான நிலையில் குறைத்துகாட்டி மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்படுகிறது. இவைகளை களைய அரசு உறுதியோடு செயல்பட வேண்டும்.

**மேற்கூறியவற்றினை அடைய கீழ்கண்ட கொள்கை முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.**

1. சுகாதாரத்திற்கான நிதியானது பல மடங்கு அதிகரிக்கப்பட்டு மக்களின் உடல்நலனை மேம்படுத்தவும், இதிலுள்ள பெரிய இடைவெளியினை குறைத்து மனித வளத்தினை வளர்த்தெடுக்க வேண்டிய நிலையானது இந்த நோய் தொற்று காலத்தில் வெளிப்படையாக தெரிந்தது. . இதற்கான நிதியை திரட்ட மத்திய அரசு பெரிய கார்ப்பரேட் நிறுவனக்கள் மீது வரியினை விதித்து பெறலாம். என்ற வாய்ப்பு உள்ளது
2. மாவட்ட அளவிலுள்ள அனைத்து சுகாதார அமைப்புகளையும் இதர அரசு மருத்துவ சேவைகளையும் தனியார் மயமாக்குவது என்ற முடிவினை அரசு உடனடியாக திரும்ப பெறவேண்டும் உடல்நலத்திற்கான காப்பீடு திட்டம் பொது சுகாதாரத்தில் விரிவுபடுத்த வேண்டிய அத்தியாவசியத்தை இந்த கோவிட் காலம் நமக்கு தெளிவாக்கியுள்ளது.
3. தனியார் மருத்துவ துறையானது ஒருங்கிணைக்கப்பட்டு அதில் சேவைக்கான கட்டணங்கள், தரமான சேவை, மருத்துவ வசதிகள், ஆகியவற்றில் நோயாளிகளின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்
4. கோவிட் தொற்று நோயினை சமாளிக்க அனைத்து அத்தியாவசிய மருந்துகள், நோய் அறியும் கருவிகள், முகக்கவசம் போன்ற உடுப்புகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யவும், இதற்கான கட்டாய உரிமையினை சட்டத்தின் அமுல் படுத்த வேண்டும். இவை அனைத்தின் மீதுள்ள ஜி.எஸ்.டி வரிகள் நீக்கப்பட்டு விலைகள் கட்டுப்படுத்தபட வேண்டும். கோவிட் நோய்க்கான அனைத்து அடிப்படை மருந்துகள் இதரவைகள் ஆகியவை பொதுத்துறைகளில் உற்பத்தி செய்யப்பட வேண்டும்
5. ஆக்ஸிஜன் பற்றாக்குறையை, அதனை அதிக உற்பத்தி செய்வதன்மூலமும் அதனை குறிப்பிட்ட இடத்திற்கு எடுத்து செல்லும் வசதிகளை மேம்படுத்துவதோடு இதற்கான உற்பத்தி ஆலைகளையும் விரிவாக்கம் செய்ய வேண்டும்.
6. தடுப்பூசிகள் வழங்களும் அவைகளின் விநியோகமும்

   அ) தற்போதுள்ள இரண்டு உற்பத்தியாளர்களோடு நிறுத்தாமல் அதிக எண்ணிக்கை உற்பத்தியாளர்களை இந்த தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய தேவையான உரிமைகள் கொடுத்தும்/ தேவை எனில் காப்புரிமை ரத்து செய்தும், அவைகளுக்கு தொழில்நுட்பமும் அளிக்கப்பட வேண்டும்..

   அரசு, தனியார் உற்பத்தியாளர்களோடு போடப்படும் ஒப்பந்தம் வெளிப்படையாக இருத்தல் வேண்டும். கோவாக்சினுக்கான காப்புரிமை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அரசிடம் இருக்க வேண்டும், அதே சமயம் கோவிட்ஷீல்ட் கிடைபதில் காப்புரிமை ஒரு பிரச்சனையாக

இருக்குமாயின் அதற்கு கட்டாய லைசன்ஸ் முறை சட்டம் விதிக்கப்பட வேண்டும்.

ஆ) ஸ்புட்னிக் மற்றும் இதர தடுப்பூசிகள் இங்கு உற்பத்தி செய்யவும் அல்லது இறக்குமதி செய்யவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

இ) இந்த தடுப்பூசிகளின் உற்பத்தியினை அதிகரிக்க நாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களை இயக்கி தேவையான தடுப்பூசிகளை உற்பத்தி செய்திட வேண்டும்.

7. அனைத்து தடுப்பூசிகள் மருந்துகளின் விலையானது உற்பத்தி செலவின் அடிப்படை அளவினைக் கொண்டு இருக்க வேண்டும், அதில் மாநிலங்களுக்கான ஒதுக்கீடு இருத்தல் வேண்டும், இதில் அனைத்து மாநிலங்களும் சமமாகக் கருதப்பட வேண்டும்; அதனால் எல்லோருக்கும் தடுபூசி கிடைக்கும்.

8. மரபணு தொடர்பினை நாடு முழூவதும் அறிந்து, அதனை தடுப்பூசி உற்பத்தியாளர்கள், ஒழுங்குமுறை ஆணையம், நோய் கண்டறிதல் ஆகியோரிடம் அளித்து தடுப்பூசிகளின் தரத்தினை அறிய முடியும் அதனை கண்காணிக்கவும் முடியும். வைரசுகள் இந்த ஊசிகளிலிருந்து தப்புவதையும் கவனித்தல் வேண்டும்.. இந்த மரபணு தொடர்பு பற்றிய தகவல்கள் பொது வெளிக்கு வரவேண்டும்.

9. பொது சுகாதாரத்தில் ஆராய்ச்சிகளை நடத்தி அதனை இத்தகைய தொற்று நோய்க்கான நிலைமையினை அறிந்து அதற்கு ஏற்ப பொது முடக்கம்,மற்றும் மருத்துவ வசதி ஆகியவையினை அறிவிக்க வேண்டும்

10. அனைவருக்குமான பொது பாதுகாப்பு திட்டத்தினை ஏற்று தொற்றினால் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கும், கிராமப்புற மக்களுக்கும், இறந்தவர்களின் குடும்பத்திற்கும் புதிய பொருளாதார உதவித்தொகையினை அளித்திட வேண்டும்

11. தற்போதுள்ள மையப்படுத்தப்பட்ட திட்ட முறைக்கு பதிலாக மைய அரசு இந்த கோவிட் நோயினை எதிர்த்து போராடும் திட்டத்தில் ஒரு பங்குதாரராக இருந்து, அரசின் பல்வேறு கட்டமைப்பான சட்டம், அரசு இயந்திரங்கள், சிவில் அமைப்புகள், பொதுச்சுகாதார பணியாளர்களையும் இணைத்து ஜனநாயகப் படுத்தப்பட்ட முறையில் இந்த கோவிட் தொற்று நோய் பிரச்சனையினை அணுக வேண்டும்.

12. மூன்றாம் கட்ட அலையினை எதிர்பார்ப்பும் அதற்கான தடுப்பு முறைகளும்: இந்த அகில இந்திய மக்கள் நலவாழ்வு இயக்கமானது இந்த இரண்டாவது அலை குறைந்தாலும், வருங்காலத்தின் தேவையினை ஒட்டி மேலே கூறியுள்ளவையினை அரசு அமுல்படுத்தப்பட வேண்டும்.

13. முதல் மூன்று மாதங்களில் நிலவியதை ஒட்டி பொது சுகாதாரத்தில் தளர்வினை கையாண்டதால் இந்த தொற்று நோயினை சமாளிப்பதில் அரசானது பெரிய தவறினை செய்தது. இதனால் இந்த நாடு பெறும் பாதிப்புக்குள்ளகியது. நீதி மன்றங்கள், அறிவியலாளர்கள், விஞ்ஞானிகள், ஜனநாயக அமைப்புக்கள், சுகாதரப் பணியாளர்கள் ஆகிய அனைத்து பகுதியும் எதிர்கொள்ள தயாராக இல்லை என்றால் மூன்றாம் அலை பேரெழுச்சியாக எழுவதை தடுக்க முடியாத நிலை ஏற்படும்.

14. இறுதியாக, அகில இந்திய மக்கள் நலவாழ்வு இயக்கம் உடல்நலமும் உடல்நலத்திற்கான வசதியும் அடிப்படை மனித உரிமையாகும் எனவும் இதனை மத்திய மற்றும் மாநில அரசுகள் முன்னுரிமை அடிப்படையில் இன்றைக்கு மக்களுக்கு அளிக்க வேண்டியது அரசியல் கடமையாகும்.

இதற்கான நிதி மற்றும் மனித வளத்தையும் அதிகப்படுத்தி அரசு ஒரு சமத்துவ பார்வையோடும் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச்செய்யும் ஜனநாயகத்தை மதித்து செயல்பட்டால்தான் மக்களின் உடல்நலம் தற்போது மட்டுமல்ல நிரந்தரமாக மனித உரிமையும் ஜனநாயகமும் சமத்துவமும் மனித இனத்திற்கு முழு மீட்பும் கிடைக்கும்.

-------------------------------------------------

தொடர்புக்கு:
மக்கள் நலவாழ்வு இயக்க செயலகம்
18, ரத்தினபுரி, கோயம்பேடு, சென்னை - 600107
கைபேசி: 94443282718, 9840511638
http://phmindia.org/category/tamilnadu/
https://www.facebook.com/MNITamilnadu

தமிழ் மொழிபெயர்ப்பில் உதவி : திரு சுகுமாரன், திரு கு. செந்தமிழ் செல்வன் மற்றும் திரு எல். பிரபாகரன், தமிழ்நாடு அறிவியல் இயக்கம்